18th SEPTEMBER 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 49 | பக்கங்கள் - 07 | editor.uthayam@gmail.com



# பிரச்சாரங்கள் நிறைவு மீறினால் கைது

மும்முனைப் போட்டி! வெல்வது யார்!! 21ல் மக்கள் தீர்ப்பு!!!

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியைத் தேர்ந்தேடுப்பதற்கான தேர்தல் 21 ம் திகதி நடைபெறவுள்ளது.இதற்கான பிரச்சாரங்கள் யாவும் நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்துள்ளன.

02 ›››

சிங்கள, தமிழ், முஸ்லிம்களின்

## ஆதரவுடன் வெல்வேன்

அனுர குமார பெருமிதம்!

எதிர்வரும் 21ல் நடைபெறும் தேர்தலில் சிங்கள, தமிழ், முஸ்லிம்களின் ஆதரவுடன் பெரு வெற்றியீட்டுவோம். இந்த வெற்றி ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டது. அந்த வெற்றியை

05ம் பக்கம்பார்க்க...



## சவால்களை முறியடித்து பெரு வெற்றி ஈட்டுவோம்

இறுதிக் கூட்டத்தில் சஜித் பிரேமதாச உறுதி!

அனைத்து விதமான புலனாய்வுத்துறை ஆய்வுகளின் பிரகாரம் ஐக்கிய மக்கள் சக்தியும் தானும் 20 இலட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெறுவோம் என்பது உறுதியாகி இருக்கின்றது. இது யதார்த்தமான

03ம் பக்கம்பார்க்க...



## 22ல் வெற்றி நிச்சயம் நாட்டையும் வெல்ல வைப்பேன்

இறுதிக் கூட்டத்தில் ரணில் உறுதி!

செப்டெம்பர் 22ஆம் திகதி தனது வெற்றி உறுதியானது என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அனைவரையும் ஒன்றிணைத்து

03ம் பக்கம்பார்க்க...



## 22ல் வாழ்க்கை மாற வேண்டும் ஆச்சரியமான தீர்மானத்தை எடுங்கள்

கொட்டாவ கூட்டத்தில் திலித் ஜயவீர வேண்டுகோள்!

அரசியல் வரலாற்றில் இதுபோன்ற பொன்னான வாய்ப்பு கிடைத்தது இல்லை. எதிர்வரும் 22 ஆம் திகதி உங்களின் வாழ்க்கை மாற வேண்டும். பாவ அரசியலினாலேயே மக்களுக்கு இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. தீர்மானம் மிக்க இந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் புத்திசாலித்தனமான தீர்மானத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆச்சரியமான தீர்மானத்தை மக்கள் வெளிப்படுத்த வேண்டும் என்று சர்வசன

02ம் பக்கம்பார்க்க...



## நாங்கள் குற்றமிழைக்கவில்லை எம்மீது வழக்கு தொடரலாம்

நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

ராஜபக்ச குடும்பம் பொது மக்களின் பணத்தை திருடவில்லை என்பதை எந்த நீதிமன்றத்திலும் நிரூபிக்கத் தயார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற மக்கள் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"நல்லாட்சி அரசாங்கம் நெல்

05ம் பக்கம்பார்க்க...




உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## பிரச்சாரங்கள்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இத் தேர்தலில் வழமையை விட மும்மனைப் போட்டி நிலவுவது விஷேட அம்சமாகும்.தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அனுர குமார திஸ ாநாயக்க ஆகியோருக்கிடையில் கடும் போட்டி நிலவுவதை அவதானிக்க முடிகின்றது. இதேவேளை பிரச்சாரங்கள் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் அதனை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்னாயக்க தெரிவித்த அவர் சட்டத்தில் அவர்களை கைது செய்யவும் முடியுமென்றும் கூறியுள்ளார்.

இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் காலம் இன்று (18) நள்ளிரவுடன் முடிவடையவுள்ள நிலையில், குறித்த காலக்கெடுவிற்குப் பின்னர் சட்டவிரோத பிரச்சாரத்தில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

செய்திச் சேவையொன்றுக்கு பேட்டியளித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, “குறிப்பிட்ட காலக்கெடுவிற்குப் பின்னரும் எந்தவொரு தனிநபரோ அல்லது குழுவோ வேட்பாளர்களை பிரச்சாரம் செய்வது அல்லது ஊக்குவிப்பது தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும்” என்றார்.

ரத்நாயக்கவின் கூற்றுப்படி, நியாயமான மற்றும் சுதந்திரமான தேர்தல் நடைமுறையை உறுதி செய்வதற்காக கடுமையான விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன.

“பிரச்சாரக் காலம் முடிவடைந்தவுடன், பொதுப் பேரணிகள், விளம்பரப் பொருட்கள் விநியோகம் அல்லது வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்வது அனுமதிக்கப்படாது. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு எந்தவொரு பிரச்சாரத்திற்கும் எதிராக நடவடிக்கை எடுக்க பொலிஸிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, ”என்று அவர் மேலும் கூறினார்.

## 22ல் வாழ்க்கை...

(முன் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

சர்வசன அதிகார கூட்டணியின் இறுதி பிரசாரக் கூட்டம் இன்று (18) கொட்டாவ பிரதேசத்தில் இடம்பெற்றது. அதன்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாற்றத்தை எதிர்பார்த்தே இந்த நாட்டு மக்கள் கோட்டாபய ராஜபக்ஷ வை அவரது பதவியிலிருந்து துரத்தியடித்தார்கள். அதன் பின்னர், இந்த நாட்டின் கடனுக்கான தந்தையாக கருதப்படும் ரணில் விக்கிரமசிங்கவை மாற்று ஜனாதிபதியாக அமர செய்தார்கள். அந்த மாற்றத்துடன் தற்போது ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. அந்த மாற்றம் தற்போது இல்லை. 225 இல்லை என்று கூறிய முறையை மாற்றுமாறு கூறிய ஊழல்வாதிகளை துரத்தியடிக்க வேண்டும் என்று கூறிய எமக்கு என்ன நடந்தது. தற்போது வேட்பாளர்களாக களமிறங்கியுள்ள சகலரது முகங்களும் பழைய முகங்களே.

சொத்து விவர அறிக்கைகளிலும் தமது வருமானமாக இரண்டு இலட்சம் இரண்டரை இலட்சம் ரூபா என்றே குறிப்பிட்டுள்ளார்கள். இதனை மக்கள் நம்புவார்களா? ஊழல் முறையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவே இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். பழைய வேலைத்திட்டங்களை அவ்வாறே முன்னெடுத்துச் செல்லவே மக்களிடம் வாக்கு கோருகிறார்கள்.

அன்று அமைச்சரவை அமைச்சராக இருந்தவரே இந்த நாட்டுக்கு 75 வருட சாபம் இருப்பதாக கூறினார். ஆயிரக்கணக்கான வாவிகளை அமைக்க அவருடன் நானும் வாவிக்கு இறங்கினேன். ஆனால், எந்தவொரு வாவியும் அமைக்கப்படவில்லை. அவ்வாறான பிரபல அமைச்சரே 3 இலட்சம் ரூப மாத்திரமே தனது வருமானம் என்று கூறுகிறார். ஆனால், ஏழு மாடி கட்டடத்தில் இருக்கிறார். அந்த அமைச்சரின் அமைச்சு அதிகாரங்களை பயன்படுத்தி அரசாங்கத்தால் உடமையாக்கப்பட்ட காணியிலேயே அதனை நிர்மானித்துள்ளார்கள். அதில் சுகபோக மாளிகையே இருக்கிறது. அதிலேயே அவர் வாழ்கிறார்.

அதிகாரத்தை பயன்படுத்தி தொலைகாட்சி, வானொலிகளை பெற்றுக்கொண்டு அவற்றை விற்றார். 400 மில்லியன் ரூபாவுக்கு விற்றார். இதுவே திருடர்களை பிடிக்கவரும் திருடரின் கதை. மக்கள் பெரும் நெருக்கடியில் இருக்கும் சந்தரப்பத்தில் பல மில்லியன் ரூபா செலவளித்து அமெரிக்காவுக்கு செல்கிறார்கள்.

ஆனால், என்னால் ஐந்து வீடுகளை நிர்மாணித்து கொடுக்க முடியும். அதனை செய்தும் காட்டியுள்ளேன். வரி செலுத்திய பணத்திலேயே நான் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளேன்.

இந்த தீர்மானம் மிக்க தேர்தலில் இந்த நாட்டுக்கு மக்கள் புத்திசாலித்தனமான தீர்மானத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆச்சரியமான தீர்மானத்தை மக்கள் வெளிப்படுத்த வேண்டும். சம்பிரதாய பூர்வமான இந்த பேரணிகளுக்கு பஸ்களில் மக்களை அழைத்து வந்து, கெமராக்களை சுற்ற விட்டு காண்பிக்கப்படும் அந்த அப்பாவி மக்களின் உண்மை வாழ்க்கையில் எவ்வாறு மகிழச்சியை உருவாக்கும் விதத்தை நாங்கள் அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் - என்றார்.






## சவால்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மைப்படுத்தப்பட்ட விடயமாகும். இந்த உண்மையும் நம்பிக்கையும் நாடு பூராகவும் பரவி இருக்கின்றது. எனவே இந்த வெற்றியை சமாதானமாகவும் பணிவாகவும் ஒற்றுமையை பாதுகாத்துக் கொண்டாட வேண்டும். தற்பொழுது அநுர ரணில் ஆகியோரின் டீல் தோல்வியடைந்திருக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2024 ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 72 ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் செப்டம்பர் 18 ஆம் திகதி கொழும்பில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாற்றுக் கருத்தோடு இருக்கின்றவர்களை பாதுகாத்து ஒருமைப்பாட்டோடும் சகோதரத்துவத்துடனும் நட்புடனும் மிகப்பெரிய சக்தியாக மாற்றிக்கொண்டு இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். இதில் ஒரு பக்கம் தன்னை தோல்வியடைய செய்ய வேண்டும் என்பதற்கான முயற்சியில் ரணில் மற்றும் அநுர இணைந்த கூட்டமைப்பு அரச ஊடகங்களை பயன்படுத்தி தன்னை இம்சித்து வந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவர்கள் பொருளாதார மேம்பாடு என்று கூறி பொருளாதாரத்தை சுருக்கி அசௌகரியத்தையும் அழுத்தங்களையும் திணித்து அனைத்தும் சாதாரணமானவை என்று குறிப்பிட்டாலும், வறுமை அதிகரித்து வாழ்வாதாரம் வீழ்ச்சியடைந்து முழு நாடும் அனாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஊழலை செய்து தரகு பணத்தை பெற்றுக் கொள்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.

பைல்களை காட்டி திருடர்களை பிடிப்பதாக கூறி அநுர அதிகாரத்தை கோரினாலும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாமே திருடர்களை பிடித்தோம்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்து வாக்குகளை வீணடிக்க வேண்டாம். உண்மையான மனிதநேயமிக்க யுகத்தை உருவாக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்யுங்கள். பைல்களை காட்டி திருடர்களை பிடிப்போம் என்று அதிகாரத்தை அநுர குமார திசாநாயக்க கோரினாலும், ஐக்கிய மக்கள் சக்தியே எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு திருடர்களை பிடித்தது. திருடர்களை பிடிப்பதற்கு அதிகாரம் தேவையில்லை என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

கூலிக்காக நான் ராஜபக்ஷக்களுக்கு அடிபணியவில்லை.

நான் கூலிக்காக அரசியல் செய்யவில்லை ராஜபக்ஷக்களை பாதுகாத்தது ரணில் விக்ரமசிங்க, அநுரகுமார திசாநாயக்கவை ராஜபக்ஷக்கள் தான் முன்மொழிந்தார்கள். இவர்கள் இருவரும் ராஜபக்ஷக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள். ராஜபக்ஷக்களுடன் டீல் இல்லாத காரணத்தினால் அன்று நான் அதிகாரத்தை பொறுப்பெடுக்கவில்லை. இந்த தேர்தலின் ஊடாக மக்களைப் பொறுப்பேற்று பொறுப்புக் கூறக்கூடிய பொது மக்களின் யுகத்தை உருவாக்குவோம். நாட்டை வெற்றியடையச் செய்யும் புதிய புரட்சிகரமான பயணம் ஒன்றை மேற்கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக கடமைகளை பொறுப்பேற்பது என்பது 24 மணித்தியாலமும் மக்கள் மீதான பொறுப்புக்களை ஏற்று, மக்களுக்கு பொறுப்பு கூறும் வகையில் முறையான அரசாங்கத்தை முன்னெடுப்பதாகும். அனைத்து அரச கொடுக்கல் வாங்கல்களையும் முறையாக மேற்கொள்வதோடு அனைத்து செயல்பாடுகளையும் டிஜிட்டல் முறைப்படுத்துவோம். கொள்வனவு முறைகளை முறையாக முன்னெடுப்போம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## 22ல் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலுவான பொருளாதாரத்துடன் அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்தார்.

அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு 2022ஆம் ஆண்டு அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டுக்காகவே தான் முன்னோக்கி வந்ததாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அனைவரும் இணைந்து இளைஞர் யுவதிகளுக்கு வளர்ந்த நாடொன்றைப்" பெற்றுக் கொடுப்பதற்கான பொறுப்பை நிச்சயம் நிறைவேற்றுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு கிரேண்ட்பாஸில் இன்று (18) இரவு நடைபெற்ற "ரணிலால் இயலும்" இறுதி வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற பொதுக் கூட்டங்களின் தொடரில் இறுதிப் பொதுக்கூட்டம் இதுவாகும். இதில் மத்திய கொழும்பைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதியை பொதுமக்கள் பெரு வரவேற்பளித்தனர்.

"இந்த மக்கள் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை மீண்டும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளாத பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மக்களின் ஆணையைக் கோருவதாகவும் தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்தில் தள்ளும் சஜித் மற்றும் அநுரவின் கொள்கைகளை இந்நாட்டு மக்கள் செப்டெம்பர் 21 ஆம் திகதி தோற்கடிப்பார்கள் என தெரிவித்த ஜனாதிபதி, நாட்டை நேசிக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டை வெற்றிகொள்ளும் வேலைத் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதாகவும் வலியுறுத்தினார்.

இந்த பேரணிக்கு முன்னர் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற பூஜையிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியின் வெற்றிக்கு ஆசிர்வாதம் வழங்கும் முகமாக இளம் தொழில்முனைவோர்கள் இந்த விசேட பூஜையை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டதாவது,

""கட்சி சார்பாக அன்றி சுயேட்சை வேட்பாளராக தேர்தலில் களமிறங்கியுள்ளேன். 2 வருடத்திற்கு முன்பிருந்த நிலையை நினைவில் கொள்ள வேண்டும். வாழ்க்கை சவால்கள் நிறைந்தது. ஒன்றில் வெற்றி பெறும் போது மற்றொரு சவால் எழும். வாழ்வில் பாராட்டும் விமர்சனமும் மாறி மாறிக் கிடைக்கும். நான் பொறுப்பை ஏற்ற போது அனைவரும் தப்பி ஓடினார்கள். மக்கள் என்னை நிராகரித்தாலும் எனக்கு மக்களை நிராகரிக்க முடியாது. சஜித்திற்கும் அநுரவிற்கும் உங்களை நிராகரிக்க முடிந்தது. மக்கள் என்னை மறந்தாலும் நான் அவர்களை மறக்கவில்லை.

எனது வீட்டை எரித்த போதும் நான் ஒதுங்கிச் செல்லவில்லை. மக்கள் கஷ்டப்பட்டார்கள். வங்குரோத்தடைந்த நாடாக அறிவிக்கப்பட்ட நிலையில்தான் நாட்டை பொறுப்பேற்றேன். மக்களுக்காக முடிவுகளை எடுத்தேன். விமர்சனங்கள் ஏச்சுப் பேச்சுகள் கேட்க நேரிட்டது. எமது முன்னெடுப்பினால் வருமானம் அதிகரித்தது. அடுத்த வருடம் வாழ்க்கைச் செலவை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவேன்.

கடனை மீளச் செலுத்த முடியாததே பிரதான பிரச்சினையாக இருந்தது. 18 நாடுகளிடம் கடன் பெற்றிருந்தோம். சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கடன் பெறப்பட்டிருந்தது. கடனை மீளச் செலுத்த முடியாது என அந்த நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டது. 17 நாடுகளுடனும் சீனாவுடனும் உடன்பாடுகள் எட்டப்பட்டன. நாளை சிங்கப்பூர் பங்குச் சந்தையில் இது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும். ஐ.எம்.எப் ஒப்பந்தத்தை மீற செயற்பட்டால் நிவாரணம் கிடைக்காது. வங்குரோத்து நிலையில் இருந்து நாடு விடுபட்டால் வெளிநாட்டு உதவிகளைப் பெற முடியும். எம்மால் முன்னேற முடியும். நாம் எந்தநாளும் வறுமையில் இருக்கப் போகிறோமா? பொருளாதாரத்தைப் பலப்படுத்தி அனைவரையும் செல்வச் செழிப்புள்ளவர்களாக மாற்ற வேண்டும்.

ஐ.எம்.எவ். ஒப்பந்தத்தை மீறிச் செயற்பட்டால் இரு வேளை பட்டினியாக இருக்க நேரிடும்.

ஒரேயொரு ஐக்கிய தேசியக் கட்சி தான் உள்ளது என்பதை ஐதேகவினருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். பிரேமதாஸவின் பின்னர் நான் தான் கட்சியைப் பாதுகாத்தேன். எந்தநாளும் பிச்சையெடுக்க முடியாது.

இதனை மாற்றியமைக்க வேண்டும்.

பொய்யான அரசியலால் பயனில்லை. எமது மக்களை வசதிபடைத்தவர்களாக மாற்ற வேண்டும். எம்மால் இயலும். நாம் வெல்வது உறுதி" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 SEPTEMBER 11 -WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இன தீவிரவாத கருத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரம்..!

21ஆம் திகதி நடைபெறவுள்ள நாட்டின் 9 வது ஜனாதிபதி தேர்தலுக்கான அமைதிக்காலம் 18 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பமானது. இக்காலத்தில் தேர்தல் பிரச்சாரங்கள் எவையும் முன்னெடுக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை புரிந்துநடப்பது யாவரினதும் கடமையாகும். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 38 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் பலர் செயற்பாடுகளற்ற வேட்பாளர்களாக இருக்கின்றனர். இவர்களில் பலரை கடந்த இரு மாதங்களாக நடைபெற்ற பிரச்சாரங்கள் எவற்றிலும் மக்கள் முன் காணமுடியவில்லை. ஜனநாயக ரீதியாக ஒவ்வொரு பிரஜைக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமையை பயன்படுத்தியே இவர்கள் அனைவரும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். 38 அபேட்சகர்களது பெயர்களும் வாக்குச் சீட்டில் இடம்பெற்றுள்ளன. இதனால் வாக்காளர்கள் தமது அபேட்சகர்களை தெரிவு செய்வதற்கு பல சிரமங்களை எதிர்நோக்கக் கூடும். இதனால் குறிப்பிடத்தக்களவு வாக்குகள் வீணாகிச்செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாவுள்ளது. எனவே வாக்காளர்கள் தமது தேர்வினை மிகவும் அவதானமாக மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். இவ்வாறு கணிசமான அபேட்சகர்கள் போட்டியிடக் காரணம் அவர்கள் பிரதான வேட்பாளர்களுக்கு முகவராக செயற்படும் நோக்கமேயாகும். உண்மையிலேயே பிரதான வேட்பாளர்கள் இவ் அபேட்சகர்களுக்கு பின்னணியில் இல்லாமலில்லை. தேர்தல் ஆணைக்குழு எதிரவரும் காலங்களில் இவ்வாறு அதிகமானோர் போட்டியிடும் செயற்பாடுகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். ஜனநாயக உரிமையினை துஷ்பிரயோகம் செய்ய முற்படும் இவ்வாறான ஏற்பாடுகளுக்கெதிராக புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

இம்முறை தேர்தல் பிரச்சாரங்கள் முன்னைய கால தேர்தல்களை விட விஷேடத்துவமிக்கது. முன்னைய கால தேர்தல் பிரச்சாரங்களில் மக்களின் மனதை மாற்றுவதற்கு இனவாத மற்றும் தீவிரவாத சாடல் கருத்துக்கள் பரப்பப்பட்டு வந்தன. சிறுபான்மை மக்களுக்கு அச்ச நிலைமைகளை ஏற்படுத்தும் வண்ணம் தேரதல் பிரச்சார மேடைகள் முழங்கின. ஒப்பீட்டளவில் இம்முறை அவ்வாறான நிலைமைகள் மாற்றம் கண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் காலங்களிலும் தேர்தல் காலங்களில் இவ்வாறான நிலைமைகள் பின்பற்றப்பட வேண்டும். போட்டியிடும் அபேட்சகர்களில் நாட்டின் எதிர்காலத்தை முன்னெடுத்து செல்லக்கூடியவர்களை தெரிவுசெய்வது வாக்காளர்கள் அனைவரினதும் கடமையாகும். அவர்களது தேர்தல் வாக்குறுதிகளை மிகத் தெளிவாக பரிசீலித்து நாட்டை அடுத்த 5 வருட காலத்துக்கு யாரிடம் கையளிப்பது என்பதில் தீர்க்கமானதொரு முடிவினை வாக்காளர்கள் எடுக்க வேண்டும்.

இத் தேர்தலை அமைதியான முறையில் நடாத்தி முடிக்க தேர்தல் ஆணைக்குழுவிற்கு நாட்டுமக்கள் அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். உண்மையில் தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் அனைத்தும் ஒரு முன்மாதிரியானதாகவே இருந்திருக்கிறது. அமைதியான முறையில் தேர்தலை நடாத்தி வாக்காளர்காளர்கள் தாம் வாக்களிப்பதிலிருந்து ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுவதற்கிடையிலான அனைத்து செயற்பாடுகளுக்கும் நாட்டுமக்களும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

# சகல இன மக்களினதும் ஆதரவோடு சஜித் பெரு வெற்றியீட்டுவார்

## கஹட்டோவிட்ட கூட்டத்தில் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் நம்பிக்கை



இந்த நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு ஜனநாயக ரீதியில் தீர்வுகளை தரக்கூடிய ஒரே தலைவர் சஜித் பிரேமதாசவே. அவர் மீது நம்பிக்கை வைத்து வாக்களியுங்கள்.ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுங்கள் என களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் வேண்டுகோள் விடுத்தார். கடந்த 17 ம் திகதி இரவு கஹட்டோவிட்டவில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அத்தனகலைத் தொகுதி அமைப்பாளர் சந்திரசோம சரணலால் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் ரணில் விக்கிரமசிங்கவின் பிழையான நடவடிக்கைகள் காரணமாக அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டியுள்ளது.இது மிகவும் சிக்கலானது.சவால்கள் நிறைந்தது.

இந்த நிலையில் சரிவு கண்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் திறன் வாய்ந்தவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியிலேயே உள்ளனர்.சஜித் பிரேமதாசவை வெற்றியீட்டச் செய்வதன் மூலம் இதனைச் சாதிக்க முடியும்.எனவே அனைவரும் ஒன்றுபட்டு அவரின் வெற்றியை உறுதி செய்ய வேண்டும். சகல இன மக்களினதும் நம்பிக்கையை வென்றுள்ள அவர் அனைத்து மதத்தினருக்கும் சமமான முறையில் பணியாற்றுவார்.முஸ்லிம் மக்களின் பிரச்சனைகளை அவர் தீர்த்து வைப்பார்.

அவர் மேல் நம்பிக்கை வையுங்கள்.அவரை 22 ம் திகதியன்று இந்த நாட்டின் ஜனாதிபதி ஆக்குங்கள் என்றும் கேட்டுக் கொண்டார். பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உட்பட மேலும் பலரும் இங்கு உரையாற்றினர்.

# தமிழ் நாடு வக்பு வாரியத்திற்கு நவாஸ் கனி எம்.பி. தெரிவு



தமிழ் நாடு வக்பு சபை வக்பு வாரியத்தின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு இந்திய லோகு சபா உறுப்பினர் நவாஸ் கணி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அண்மையில் வெற்றிடமான வக்பு வாரிய அங்கத்தவர்கள் தெரிவின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் கோட்டாவுக்கு நவாஸ் கணி மாத்திரமே விண்ணப்பித்திருந்தார். இதன்படி நவாஸ் கணி பாராளுமன்ற உறுப்பினர் பிரதிநிதியாக தெரிவாகி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் தமிழ்நாடு வக்பு சபையின் தலைவராக பணிபுரிந்த முன்னாள் வக்பு சபை உறுப்பினர் அப்துர்ரஹ்மான் தனது பதவிக்காலத்தை நிறைவு செய்து அண்மையில் இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இவ்வெற்றிடத்திற்கு புதிய தலைவர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.



# விபச்சாரத்துக்கோ தன்னினச் சேர்க்கைக்கோ சட்ட ரீதியான அனுமதி வழங்க மாட்டோம்

## கஹட்டோவிட்ட கூட்டத்தில் விஜித ஹேரத் எம்.பீ.உறுதி!

(ஐ. ஏ. காதிர் கான்)

"அனைத்து இன மக்களும் ஐக்கியத்துடன் வாழும் தூய்மையான கலங்கமற்ற ஒரு நாடாக இலங்கையை மாற்றுவதே, தேசிய மக்கள் சக்தியின் உன்னத நோக்கமாகும்" என, பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

கஹட்டோவிட்டவில் நேற்று (17) இரவு இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது,

அலி சப்ரி, 2025 பெப்ரவரி மாதத்திற்குள் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் முழுமையாக நீக்கப்படும் என்று கூறியுள்ளார். நான் கேட்கிறேன். அப்போதைக்கு அலி சப்ரியும் இல்லை. ரணிலும் இல்லை. பெப்ரவரியில் ஜனாதிபதி யார் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அப்போது அநுர குமார திஸாநாயக்க தான் இந்நாட்டின் ஜனாதிபதி. இதை அலி சப்ரி மறந்து விட வேண்டாம்.

மாலிமா வந்தால், நாடு பற்றி எரியும். பன்ஸல, பள்ளி, கோவில்கள் இல்லாமல் ஆகும். முஸ்லிம்களின் மத உரிமைகள் இல்லாமல் போகும். இவ்வாறு ஏனைய கட்சிக்காரர்கள் பொய்ப்பிரசாரம் பரப்பி வருகின்றனர். அத்துடன், 9 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றுவதாகவும் கூறுகின்றனர். நாம் அதனைப் பாதுகாத்துக் கொண்டு எமது அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

பௌத்த மதத்தைப் போன்றே ஏனைய சகல மதங்களுக்கும் முன்னுரிமை வழங்குவோம். நாம் விபச்சாரத்தை அமுலுக்குக் கொண்டு வருவதாகவும், அதனுடன் தொடர்புடைய ஏனைய அம்சங்களுக்கும் இடம் ஒதுக்கிக் கொடுப்போம் என்றும் மக்களை அச்சுறுத்துகின்றனர். நாம் கருணை காருண்யம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே எமது அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் மக்களுக்கு பொய்களை உரைத்து வருகின்றனர். எவ்வாறான பொய்களைக் கூறினாலும், அநுரவே ஜனாதிபதியாக வரப்போகிறார். அநுர வெல்கிறார். ரணில் தோற்கிறார். இதுதான் உண்மை.

ரணில் 2010 இல் பொன்சேகாவை களமிறங்கினார். 2015 இல் சிறிசேனவை களமிறங்கினார். ரணில் தேர்தலில் போட்டி இடவுமில்லை. போட்டியிட்டிருந்தாலும் வெல்லப் போவதுமில்லை. ரணிலுக்கு இம்முறையும் தேர்தலில் நிச்சயம் தோல்வியே. இதை மக்களும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதே உண்மை.

நாம் எதற்கும் நிலை தடுமாறவில்லை. நன்கு சுய புத்தியோடு தான் இருக்கிறோம். தேர்தலில் வெற்றி பெற்றவுடன், அடுத்த கட்ட நகர்வுக்கான திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறோம். 21 ஆம் திகதி தேர்தல் முடிந்த கையோடு, 22 ஆம் திகதி காலையிலேயே மக்களுக்கு நல்ல செய்தி வரும். 22 ஆம் திகதி சூரியன் உதயமாகும்போது, நாட்டு மக்களின் விடிவிலும் சூரியன் உதயமாகும். 9 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க தெரிவானார் என்ற மகிழ்ச்சிகரமான செய்தி உங்கள் காதுகளுக்கு எட்டும்.

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதி ஆனவுடன் பாராளுமன்றத்தைக் கலைப்பார். அநுரவுடன் சேர்த்து நாம் நான்கு உறுப்பினர்கள். பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் வரை இரண்டு மாதத்திற்கு நான்கு பேர் கொண்ட அமைச்சரவையை அமைப்போம். இக் காலப்பகுதிக்குள், ஆண் அல்லது பெண் பிரதமர் ஒருவரை நியமிப்போம்- என்றார்.



### நாங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேமிப்பதற்காக மத்தளை கட்டப்பட்டதாக நினைத்தது. சூரியவெவ மைதானத்தை மூடினார்கள்.

எம்மை சிறையில் அடைத்த போதும் நாங்கள் திருடவில்லை. முடிந்தால், எங்கள் மீது வழக்குத் தொடருங்கள்.

குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க தயார். எல்லோரிடமும் குறைகள் உண்டு. நாங்கள் அதை சரிசெய்வோம்."

### சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பன்மடங்காக்கவே முயற்சிக்கிறோம் என நுகேகொடையில் நடைபெற்ற இறுதிக் கூட்டத்தில் உரையாற்றிய அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் தேர்தல் வெற்றியின் பின் நாட்டு மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு முன்னுரிமை கோடுப்போம். சகலரினதும் ஒத்துழைப்புடன் புதிய அரசாங்கம் ஒன்றினையும் அமைப்போம் என்றும் தெரிவித்தார்.






# தேச நலனுக்காக பாடுபடக் கூடிய இளம் தலைவர் சஜித் பிரேமதாச

### இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எம்.பீ.புகழாரம்

(இக்பால் அலி)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் இந் நாட்டின் சகல இன மக்களுக்குரிய தலைவராவர். அவர் அரசியல் நலனுக்காக இரட்டை வேடம் போடும் தலைவர் அல்ல. சகல சமூகங்களையும் பிரதிபலிக்கக் கூடிய கட்சித் தலைவர்களை அரவணைத்துக் கொண்டு எமது நாட்டின் தேச நலனுக்காக அயராது பாடுபடக் கூடிய சிறந்த ஓர் இளம் தலைவர். அதற்காக பல தரப்பட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் அவருடைய வெற்றியை உறுதி செய்வதற்காக ஒன்றிணைந்துள்ளார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் தெரிவித்தார்.

அக்குறணை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஐ. ஜனுடீனின் ஏற்பாட்டிலும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எச். ஏ. ஹலீம் தலைமையில் அக்குறணை ஐ டெக் கல்வி நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நாங்கள் பல்வேறுபட்ட அணியைச் சார்ந்த கட்சித் தலைவர்களை ஒருங்கிணைத்துக் கொண்டு பயணம் செல்லுகின்றோம். எங்களுக்கிடையே ஒற்றுமை இருக்கின்றது. ஒரே புகையிரத தண்டவாளத்தில் செல்ல வேண்டும். பாய்ந்து தடம்புரண்டு செல்ல முடியாது. இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயற்படுவதற்கான வேலைத் திட்டம் இருக்கிறது. முதலில் நாட்டில் ஜனநாயகத் தன்மை ஏற்படுத்தப்பட வேண்டும். அடுத்து கட்சிக்குள் ஜனாநாயகம் பேணப்பட வேண்டும். ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பெரு எண்ணிக்கையிலான மூத்த அரசியல்வாதிகள் ரனில் விக்கரமசிங்கவின் தலைமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கட்சியை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார்.

இந்த நிலையைக் கவனத்திற் கொண்டு கட்சியின் செயற்குழுவில் இருந்து கொண்டு நாம் நிறையப் போராட்டம் நடத்தினோம். அதற்காக அதில் இருந்து என்னை மூன்று தடவை நீக்கினார்கள்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கடைசியாக எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் புதிய அரசியல் கட்சியை உருவாக்க வேண்டும். அதன் தலைவர் சஜித் பிரேமதாச வர வேண்டும் என்று ஒரு ஜனநாயக ரீதியில் எடுத்த தீர்மானம் ஆகும்.

கட்சியின் செயற் குழு எடுத்த தீர்மானத்திற்கு இணங்க உருவாகன கட்சிதான் ஐக்கிய மக்கள் சக்தி. சகல இன மக்களையும் அரவணைத்துக் கொண்டு பயணிக்கிறது.

அந்த தீர்மானத்திற்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் விருப்பமின்றி அகில விராஜ் காரியம். சாகல ரத்நாயக, ஜோன் அமரதுங்க ஆகியோர் ஒன்றிணைந்து யானைச் சின்னத்தில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்கள். நாங்கள் ஐக்கிய மக்கள்



சக்தியின் பெயரில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தோம். பொதுத் தேர்தலில் 54 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன. நாங்கள் பெரு எண்ணிக்கையிலான ஆசனங்களைப் பெற்று எதிர் கட்சி ஆசனத்தில் அமர்ந்தோம்.

இப்போது டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் சரத் விக்கிரம ரட்ன, பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் உள்ளிட்ட இன்னும் எத்தனையோ பேர் நாட்டில் ஜனநாயக ரீதியிலான சிறந்த ஆட்சி அமைக்கக் கூடியவர் சஜித் பிரேமதாச என்று நம்பிக்கை கொண்டுள்ளார்கள். இப்படியான நல்லதொரு மாற்றம் எழுந்துள்ளது. சஜித் பிரேமதாச தோல்வியடையப் போவதில்லை. போலியான முகப்புத்தத்தின் தகவல்களை நம்ப வேண்டாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# அனுராதபுரத்தில் சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள்

இந்த வருடத்தின் கடந்த ஆறு மாதங்களில் அனுராதபுரம் மாவட்டத்திலுருந்து சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 491 முறைமைகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அனுராதபுரம் மாவட்ட சிறுவர் காப்புறுதி அதிகாரி மஹேந்திர தஸநாயக்க தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பில் ஊடக நெறிமுறைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் ஊடகவியலாளர்களை அறிவூட்டும் செயலமர்வு அண்மையில் அனுராதபுரம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது அவர் இதனை தெரிவித்தார்.

அனுராதபுரம் மாவட்ட சிறுவர் காப்புறுதி உத்தியோகத்தர் இது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் தெரிவிக்கையில், இந்தக் காலப் பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பபாக சிறுவர் நலச் சேவை இலக்கம் 1929 க்கு 202 முறைப்பாடுகளும் மாவட்ட பிரதேச அதிகாரிகளுக்கு 289

ජාතික ළමා ආරක්ෂක අධිකාරිය
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
National Child Protection Authority
ChildLine Sri Lanka
1929

முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இது தவிர நன்னடத்தை திணைக்களத்தின் சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பில் 464 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும் சிறுவர் முதலீட்டு முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸ் சட்ட உதவி ஆணைக்குழு மாகாண நன்னடத்தை திணைக்களம் ஆகியவற்றுக்கு முறைமைகள் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டைப்பற்றிச் சிந்தித்து நன்றிக்கடனாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு வாக்களிப்பது நமது கடமையாகும்

### அதாவுல்லா தெரிவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாட்டைப்பற்றிச் சிந்தித்து நன்றிக்கடனாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு வாக்களிப்பது நமது கடமையாகும். கட்சிக்காக மக்கள் அல்ல. மக்களுக்காகவே கட்சி இருக்க வேண்டும். ரவுப் ஹக்கீம் மக்களை ஏமாற்றுவதை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. இவ்வாறு தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதா உல்லா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர்



லொயிட்ஸ் ஆதம்லெப்பை தலைமையில் அட்டாளைச்சேனை பிரதான வீதியில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்படி (15) கருத்தினைத் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரிக்கு முன்னாள் இடம்பெற்ற இப்பிரச்சாரக் கூட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தமீம் ஆப்தீன், தேசிய காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினர் பாயிஸ் அதிபர் உள்ளிட்ட கூடுதலான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

# கிழக்கு மாகாண மக்கள் ஒற்றுமையுடன் செயல்படுவோம்

(எம். எப். றிபாஸ்)

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்தும் வாழ்வாதார கஷ்டங்களில் இருந்தும் விடுபட்டு நிம்மதியான வாழ்வை அடைய சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்து இந் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்வோம்.என இலங்கை ஜன நாயக முன்னணியின் அம்பாரை மாவட்ட அமைப்பாளர் ஏ.எல்.இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜன நாயக முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு தலைவர் ஏ.பீ. கமால்தீன் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில் எமது நாடு இன்னும் ஒரு சில தினங்களில் தேர்தல் ஒன்றை சந்திக்க இருக்கின்ற நிலையில், கிழக்கு மாகாண மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுகின்ற போது நமது தீர்மானிக்கும் சக்தியை அடைந்து கொள்ள முடியும்.

எமது எதர்கால சந்ததினர்



சதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கான ஒரு அரசாங்கத்தை கட்டி எழுப்பபுவதற்கு முஸ்லிம்களும், ஏனைய சகோதர இன மக்களும் கைகோர்த்து செயற்படுகின்றபோது நாம் எதிர்பார்க்கின்ற சிறந்த நாடு ஒன்றை உருவாக்கிக் கொள்ள முடியும்.

மோசடி, ஊழல், ஏமாற்றுதல் ஆகியவற்றைத் தவிர்த்து, பொருளாதாரத்தை நிலைநிறுத்தவும், பராமரிக்கவும், இஸ்லாமிய அறிவுரைகளைப் பின்பற்றி நடைபெறவுள்ள தேர்தலில் ஒற்றுமையுடன் செயற்படுவோம். எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தெமட்டகொட வை.எம்.எம்.ஏ.யின் மீலாதுன்னபி விழா





(ஏ.எஸ்.எம். ஜாவித்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை ஏற்பாடு செய்திருந்த மீலாது நபி விஷேட நிகழ்வு தெமட்டகொடை வை.எம்.எம்.ஏ.பேரவையின் பிரதான மண்டபத்தில் பேரவை சமய விவகார குழுத் தலைவர் பௌசான் அன்வரின் ஏற்பாட்டில் பேரவைத் தலைவர் அம்ஹர் எம் சரீப் தலைமையில் அண்மையில் (16) நடைபெற்றது.

இந்நிகழ்வில் மீலாது தின விசேட உரையை மௌலவி ஹாபிஸ் இஹ்ஸான் காதிரி உரையாற்றினார். இதன்போது இந்துமத குருக்கள், வை.எம்.எம்.ஏ பேரவை உறுப்பினர்கள், அஹதியாக பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மறைந்த தலைவர் அஷ்ரபின் 24 வது ஆண்டு நினைவேந்தல்







(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃபின் 24 ஆவது நினைவேந்தலும் இளைஞர் மாநாடும் ஒட்டமாவடியில் (16) இடம்பெற்றது.

இதன் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாரளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் கல்முனை மாநகர மேயர் கலாநிதி ஸிராஸ் மீராசாஹிப், முன்னாள் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்கள் என பல்வேறு பட்டோர் கலந்து கொண்டனர்.

# கள்ள வாக்கு அளித்தால் 12 மாதங்கள் சிறை: 2 இலட்சம் தண்டப்பணம்

( ஐ. ஏ. காதிர் கான் )

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கள்ள வாக்கு அளிக்கும் நபர்களுக்கு, 2023 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம், 12 மாதங்கள் வரை சிறைத் தண்டனையும், இரண்டு இலட்சம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்படும்" என, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

"ஜனாதிபதித் தேர்தலில் அதிகமான கள்ள வாக்குகளை அளிக்க சிலர் முற்படக் கூடும்" என, பல கட்சிகள் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளன.

இதனால், வாக்குப் பெட்டிகளை வாக்குகள் எண்ணும் தேர்தல் மத்திய நிலையங்களுக்குக் கொண்டு செல்லும் போது, குறித்த வாகனங்களுடன் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சார்ப்பில் இருவரை மாத்திரம் தேர்தல்கள் ஆணைக் குழுவின் வாகனத்தைப் பின்தொடர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், "கள்ள வாக்கு அளிக்கும் நபர்களுக்கு, கடுமையான தண்டனைகளை மேல் நீதிமன்றத்தின் ஊடாக அளிக்க முடியும்" என, ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சிந்தக்க குலரத்ன தெரிவித்தார்.

"கள்ள வாக்கு அளிப்பவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா தண்டப்பணத்தை விதிக்க முடியும் அல்லது 12 மாதங்கள் சிறைத் தண்டனையை விதிக்க முடியும் அல்லது இரண்டு இலட்சம் அபராதத்துடன், தண்டனையையும் வழங்க முடியும்".

"1981 ஆம் ஆண்டு 15 இலக்கச் சட்டத்தின் பிரகாரம், 500 ரூபா தண்டப்பணமே கள்ள வாக்கு அளிப்பவர்களுக்கு விதிக்கப்பட்டது. என்றாலும், கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஜனாதிபதித்




தேர்தல் தொடர்பிலான சட்டத்திருத்தத்தின் ஊடாக, இந்தத் தொகை இரண்டு இலட்சமாக அதிகரிக்கப்பட்டது.

கள்ள வாக்கு அளித்த குற்றவாளியாக அடையாளம் காணப்படும் நபர்களுக்கு, மேற்படி தண்டனைகளை விதிப்பதுடன், அவர்களுக்கு 7 ஆண்டுகள் வாக்களிக்க, வாக்காளர் பதிவேட்டில் பதியவும் தடை விதிக்கப்படும்" என்றும் சிந்தக்க குலரத்ன மேலும் சுட்டிக்காட்டினார்.

# தோழர் அநுரவை ஆதரித்து ஒலுவிலில் மக்களுக்கு தெளிவூட்டல்

(இஸட்.ஏ. றஹ்மான்)



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திசாநாயக்கவின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் ஒலுவில் பிரதேசத்தில் வீடு வீடாகச் சென்று மக்களை தெளிவூட்டும் செயற்பாடுகள் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு அளிக்கும் தமிழரசுக் கட்சியின் முடிவு மன வருத்தத்தை தருகிறது

## கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம்

(இக்பால் அலி)



தேசிய மக்கள் சக்தி ஒரு மாற்றத்தை வேண்டி நிற்கும் தருணத்தில் தமிழ் அரசுக் கட்சியானது ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டும் என்று கோரிக்கையினை விடுத்திருப்பது மனவருத்தைத் தரும் விடயமாகும். இது குறித்து அக்கட்சி மீள் பரிசீலனை செய்ய வேண்டும் அல்லது சில மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட செயற் குழு உறுப்பினர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

அண்மையில் கண்டியில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு விளக்கமளிக்கும் போதே தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

தேசிய மக்கள் சக்தியானது இன்று முழு நாட்டிலும் அதாவது வடக்கு, கிழக்கு ,மலையகம் , தென்னிலங்கை மக்கள் உட்பட அனைவரையும் ஒருங்கிணைத்துக் கொண்டு செல்லுகின்ற புதிய ஜனநாயக அரசியல் பாதையை வேண்டி நிற்கின்றது.

இலங்கைக்கு ஒரு புதிய சுதந்திரத்தை வேண்டி நிற்கின்ற இந்த வேளையில் தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானம் ஒரு மனவருத்தத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றன. தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்திலே சில மாற்றத்தைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அல்லது அவர் தங்களுடைய தீர்மானம் குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும். ஆனால் வடக்கு கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் இலங்கையிலுள்ள சகலவிதமான அரசியல் ரீதியிலான பிரச்சினைகளுக்கும் ஒரு புதிய தீர்வை அணுகுவதற்காக ஒரு புதிய சுதந்திரத்தை அணுவதற்காக அவர் ஒரு மாற்றத்தை வேண்டி நிற்கின்றார்கள். அந்த அடிப்படையில் இன்று இந்த நாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய ஒரே கட்சி தேசிய மக்கள் சக்தியே. ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயகவின் தெரிவிலேதான் இந்த நாட்டுக்கு மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்றும் தெரிவித்தார்.

# கொழும்பு மத்திய தொகுதி மீள் கட்டமைப்புக்காக சஜித்தை ஆதரியுங்கள்

## முஜிபுர் ரஹ்மான் எம்.பீ வேண்டுகோள்

(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு கொம்பனி வீதி சந்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அர்சத் நிசாமுதீன் ஏற்பாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவை ஆதரித்து கூட்டமொன்று நடைபெற்றது. இங்கு உரையாற்றிய கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கொழும்பு மாவட்டம் காலம் சென்ற ஆர் பிரேமதாசாவிற்குப் பிறகு கடந்த 30 வருடங்களாக மிகவும் பின்தங்கி காணப்படுகின்றது. கடந்த காலத்தில் ஆட்சிக்கு எந்த அரசாங்கமும் கொழும்பு மத்திய தொகுதியில் எவ்வித அபிவிருத்திகளை வீடமைப்புத் திட்டங்கள் செய்யவில்லை. இங்கு உள்ள காணிகளை பலவந்தமாக அபகரித்து வெளிநாட்டு கம்பெனிகளுக்கு விற்று அதில் தொடர்மாடி வீடுகள் ஹோட்டல்களை நிர்மாணித்து பணம் சம்பாதித்தார்கள்

கொழும்புக்கு நாளாந்தம் கொம்பனி வீதியில் 10 இலட்சம் மக்கள் தொழிலுக்கு வருகிறார்கள். ஆனால் கொழும்பில் உள்ள இளைஞர் யுவதிகள் தொழில் இல்லாமல் பாடசாலை இல்லாமல் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். சிலர் சிறைகளில் வாடுகின்றனர். ஆகவே தான் எமது கொழும்பு தொகுதியில்



நாம் மீள அபிவிருத்திகளை காண்பதற்கும் எமக்கென பாடசாலை அபிவிருத்திக்கும் நாம் புஜ்சி பிரேமதாசவினை ஆதரித்து அவர் ஊடாக இப்பிரதேசத்தின் நாம் அபிவிருத்தி காண்பதற்கு நாம் அவரை ஜனாதிபதியாக்க அனைவரும் 21 ஆம் திகதி ஆதரிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

# கொழும்பு - உம்மு ஸவாயாவில் வெகு சிறப்பாக இடம்பெற்ற 'ஷமா - இலுத் திர்மிதி' பாராயண தமாம் மஜ்லிஸ்



( ஐ. ஏ. காதிர் கான் )

122 ஆவது வருடமாக, 'ஷாதுலியாத் தரீக்கா' வின் தலைமையகமான கொழும்பு - உம்மு ஸவாயாவில், புனித 'ஷமா - இலுத் திர்மிதி' பாராயண மஜ்லிஸ் தமாம் வைபவம், கடந்த (16) திங்கட்கிழமை காலை வெகு சிறப்பாக இடம்பெற்றது.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் பிறந்த புனித ரபீ - உனில் அவ்வல் மாதத்தினை சிறப்பிக்கும் முகமாக, இப்புனித சங்கைமிகு மஜ்லிஸ், வருடாந்தம் நடைபெறுகிறது.

உம்மு ஸவாயா பிரதம இமாமும், அஜ்வாத் அல் - பாஸி அரபுக் கல்லூரி முதல்வருமான 'கலீபதுஷ் - ஷாதுலி' மௌலவி எம்.எஸ். அஹ்மத் சூபி (மஹ்ழரி) தலைமையில் கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை, இப்பாராயண மஜ்லிஸ் ஆரம்பமாகி, தினமும் 12 நாட்கள் ஓதப்பட்டு வந்து, 16ம் திகதி காலையுடன் தமாம் நிகழ்வுக்கு வந்தது.

'கலீபதுஷ் - ஷாதுலி' மௌலவி அஹமத் சூபி (மஹ்ழரி) ஹதீஸ் விளக்கவுரை நிகழ்த்த, மௌலானா மௌலவி அஸ் - ஸெய்யித் பழுலுத்தீன் 'துஆ' பிரார்த்தனை இறைஞ்சினார்.

உம்மு ஸவாயா நிர்வாக சபைத் தலைவர் 'தேசபந்து' அல் - ஹாஜ் மக்கி ஹாஷிம் தலைமையிலான நிர்வாக சபையின் வழிகாட்டலின் கீழ், இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நிர்வாக சபையின் சமய விவகாரக் குழுத் தலைவர் அல் - ஹாஜ் பௌஸான் அன்வர் உட்பட நிர்வாகிகள், உலமாக்கள், கலீபாக்கள், முகத்தமீன்கள், இஹ்வான்கள் எனப் பலரும் நிகழ்வில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பேருவளைக்கு மூன்று தேசபந்து விருதுகள்

(பீ. எம் முக்தார்)

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு , தேசிய கலை அரன் மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனம் ஏற்பாட்டில் கடந்த 16 ஆம் திகதி , கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைப்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் பேருவளை நியூஸ் ஊடக வலையமைப்பு மூன்று லங்காபுத்ர தேசபந்து விருதுகளைப் பெற்றுக்கொண்டது.

ஜனாதிபதி செயலாளர் சமன் ரத்னபிரிய பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வில் பேருவளை நியூஸ் ஊடக வலையமைப்பு நிர்வாகத்தின், பணிப்பாளர் ஸாபித் துல்பிகார் " மக்களின் முரசு லங்காபுத்ர தேசபந்து விருதும், செயலாளர் பாத்திமா ஹஸ்னத் கபீர் " மக்களின் முரசு லங்காபுத்ர தேசபந்து



விருதும் மற்றும் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் நுஹா நிஸார் "கலைநிலா லங்கா புத்ர தேசபந்து " விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இம்மாபெரும் விருது வழங்கும் நிகழ்வில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பல முன்னணி சிரேஷ்ட ஊடவியளர்கள் மற்றும் கலைஞர்கள் பலர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இளம் சமூக சேவையாளர் ஷராபத் நிஸாம் காலமானார்

( பீ.எம். முக்தார்)



பேருவளை சீனங்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் ஆசிகுர் ரஸ/ல் குழு அங்கத்தவரும், இளம் வாலிப வர்த்தகரும், இளம் சமூக சேவையாளருமான ஷராபத் நிஸாம் தனது 23 ஆவது வயதில் காலமானார்.

சீனங்கோட்டை ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட நிர்வாகக் குழு உறுப்பினர் அல்-ஹாஜ் நிஸாமின் புதல்வரான இவரது ஜனாஸா சீனங்கோட்டை பாஸிய்யா ஜ/ம்மா பள்ளிவாயலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நல்லடக்கத்தில் சங்கைமிகு சாதாத்மார்கள், கலீபாக்கள், உலமாக்கள், அரசியல்வாதிகள், அரபுக் கல்லூரி அதிபர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்பட பெருமளவிலானோர் பங்குபற்றினர்.

மாத்தறை, மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர், மௌலவி அஸ்ஸெய்யித்- பஸ்மின் மௌலானா (முர்ஸி) ஜனாஸா தொழுகை நடாத்த சங்கைக்குரிய அஷ்ஷெய்க். மௌலவி ஸக்கி அஹமட் (அஷ்ரபி) பின் அஷ்ஷெய்க். காலிப் அலவி ஹாஜியார் (அலவியதுல் காதரிய்யா) துஆ பிரார்த்தனை நடாத்தினார்.

மறைந்த ஷராபத் நிஸாமுக்காக புனித மதீனாவில் உள்ள மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாசலிலும், தன்ஸானியா நாட்டில் உள்ள பள்ளிவாசலொன்றிலும் ஜனாஸா தொழுகை நடாத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சியில் தமது இளமை பருவத்தை தியாகத்தோடு அர்பணித்த ஷராபத் நிஸாமின் திடீர் மறைவு பிரதேசத்திற்கும், குறிப்பாக வாலிபர் ஹழரா ஜமாஅத்திற்கும், ஷாதுலிய்யா தரீக்காவிற்கும் ஈடு செய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும்.